**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.315/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **அஞ்சலம்** |
| Father's Name: | **ரவி** |
| Village : | **வேப்பூர்** |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 48 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.07.2024

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – வேல்முருகன், 2ம் எதிரி சாந்தா, 3ம் எதிரி வினிஷா, ஆஜர் இல்லை,அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் படிக்கவிலலை. ஆடு, மாடு மேய்த்து வருகிறேன். எனக்கு கையொப்பம் போட தெரியும். இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத எதிரிகள் வேல்முருகன், சாந்தா, வினிஷா, ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரி வேல்முருகன் எனக்கு கொழுந்தனர் உறவு முறை ஆவார். சாந்தா அவரது மனைவி ஆவார். வினிஷா அவரது மகள் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனக்கு படிப்பு இல்லாததால் எனக்கு தேதி தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சாய்ந்திரம் 4 மணியளவில் நான் ஆடு மேய்த்துவிட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டு கொண்டு இருந்தேன். அப்போது எதிரிகள் எனது கொழுந்தனர், ஓப்புடியா, ஓப்புடியா

மகள் உனக்கு என்னடி தேவடியா, குச்சிகாரி மகளே சாப்பாடு வேண்கிடக்கிறது. சாப்பாடு உனக்கு ஒரு கெடா என்று வீட்டிற்குள் புகுந்து திட்டினார்கள்.

(ii) எனது மகள் அனுசியா டைப்பிங் கிளாஸ் சென்று இருந்தார். பால் கறப்பதற்காக எனது மகளை நான் கூட்டிவந்தேன். என் கொழுந்தனார் கேமரா எடுக்க வந்திருக்கிறியாடி சிறுக்கி என்று என் மகளை திட்டி வீடு புகுந்து எதிரிகள் மூவரும் என்னையும் என் மகளையும் வீட்டிற்குள் புகுந்து அடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். கதவை பிரித்து போட்டார்கள். நான் எனக்கும் இந்த வீட்டில் உரிமை உள்ளது என்று சொன்னேன். அதற்கு உனக்கு என்ன உரிமையுள்ளது என்று சத்தம் போட்டார். நானும் எனது மகளும் 3 நாள் பெரம்பலூர் GHல் சிகிச்சை பெற்றோம். பின்னிட்டு குன்னம் காவல் நிலையம் சென்று இது சம்மந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். ( **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) புகாரில் என்ன என்ன வாசகங்கள் இருந்தது என்று என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக பாகம் கோரி சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக என்னுடைய பெரிய கொழுந்தனாரும் எதிரிகளும் ஊர் பெரியவர்களை வைத்து பேசிக்கொள்ளாலம் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. புகாரில் சம்பவம் எனது வீட் டிற்குள் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் எந்த எந்த ஆயுத்த்தால் எந்த எந்த இ டத்தில் தாக்கினார்கள் என்று புகாரிலோ, போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(ii) அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தினால் எனக்கு தலைவலியோ, கன்றிய காயமோ இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவ்வாறு எனக்கு எந்த காயமும் இல்லை. போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் சமயத்தில் முதலில் நான் இருந்தேன் என்றாலும்

பின்னிட்டுத்தான் என் மகள் வந்தார் என்றாலும் வேறு நபர்கள் இல்லை என்றாலும் சரிதான். எங்களது வீடு ஆட்கள் நடமாடு இடம் என்றால் சரியல்ல. தனியாக உள்ளது. எங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் தான் இளவரசு அரிசி கடை மற்றும் பாத்திர கடை உள்ளது என்றால் அது மெயின் ரோட்டில் உள்ளது.

(iii) எங்கள் வீடு தள்ளி உள்ளது. எங்களது வீட்டிற்கு தெற்கே தீ அணைப்பு அ லுவலம் உள்ளது என்றால் சரிதான். மருத்துவர் என்னை விசாரித்த போது மூங்கில் வாரல் என்னை அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்ன சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் 1ம் எதிரி வேல்முருகனுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நான் இருந்துகொண்டு அவரை மிரட்டி பணியவைப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை கொடுத்து அதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-

District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.315/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | அனிசா |
| Father's Name: | | ரவி |
| Village | : | வேப்பூர் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 22 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.07.2024

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – வேல்முருகன், 2ம் எதிரி சாந்தா, 3ம் எதிரி வினிஷா ஆஜர் இல்லை, அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் Bsc.கணிதம் படித்துள்ளேன். இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத எதிரிகள் வேல்முருகன், சாந்தா, வினிஷா, ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரி வேல்முருகன் எனக்கு சித்தப்பா உறவு முறை ஆவார். சாந்தா எனது சித்தி ஆவார். வினிஷா அவரது மகள் ஆவார். அ.சா.1 அஞ்சலம் எனது அம்மா ஆவார். 04.04.2022ம் தேதி நான் எப்போதும் போல் மதியம் 01,00 மணிக்கு டைப்பிங் கிளாஸ் சென்றுவிட்டேன். எனது அம்மா ஆடு மேய்த்துவிட்டு 4,00 மணி எல்லாம் வீட்டிற்கு வந்துவிடுவார். எப்போழுதும் போல் எனது

அம்மா மேற்படி தேதியில் 4 மணிக்கு வீட்டிற்கு வந்து சாப்பிட்டு கொண்டு இருந்தார். அப்போது எனது சித்தப்பா வேல்முருகன், சித்தி சாந்தா அவரது மகள் வினிஷா வீட்டிற்கு எதிரே உட்கார்ந்து கொண்டு தேவடியா, குச்சிகாரி மகளே உனக்கு சூடு சுரணை இல்லைய என்னுடைய சொத்தில் உட்கார்ந்து கொண்டு சோறு திண்ணு கொண்டு இருக்கிறாய் என்று அசிங்கமாக திட்டினார்கள்.

(ii) எங்க அம்மா அதன்பின்னிட்டு டைப்பிங் கிளாஸ்சில் இருந்து என்னை கூப்பிட வந்தார். அப்போது நானும் எனது அம்மாவும் எனது வீட்டிற்குள் சென்றபோது தேவடியா , குச்சிகாரி மகள் வந்துவிட்டாள், சிறுக்கி விடியோ எடுக்க வந்து விட்டாள் என்று எனது சித்தப்பா வேல்முருகன் என்னை திட்டினார். அவர்கள் பேசுவதை நான் ரெக்கார்ட் செய்ததை தெரிந்து கொண்டு நான் வந்து உன்னை கொல்கிறேன் இதையும் ரெக்கார்ட் செய்து யார்கிட்டையும் காட்டு என்று சொல்லிக்கொண்டே 1ம் எதிரி வீட்டிற்குள் வந்து என்னை அடித்தார். வீட்டில் இருந்த கதவை பிடித்து இழுத்து வெளியே போட்டு இது என்னுடைய வீடு, எனக்கு தான் உரிமை இருக்கிறது. யாரும் இருக்க கூடாது என்று இன்றே உங்களை கொன்றுபோடுகிறேன் என்று சொல்லி எங்களை அடித்தார். நாங்கள் வசலுக்கு வந்தோம்.

(iii) அங்கிருந்த மூங்கில் வார் குச்சியை எடுத்து யார் வந்து கேட்கிறார்கள் வந்து பார்க்கிறேன் என்று சொல்லி எனது அம்மாவை அடித்தார். நான் அதை ரெக்கார்டு செய்து கொண்டு பின்னால் சென்றேன். வினிஷா கல்லால் எடுத்து என்னை அடித்தார். போனை பிடுங்க என் மீது விழுந்தார். போன் கீழே விழுந்துவிட்டது. எனது சித்தப்பா அவர் எடுத்து வந்த கொடுவாளை காட்டி இன்று கொல்கிறேன் என்று எங்களை துரத்தி கொண்டு வந்தார். அவர்கள் பின்னிட்டு போய்விட்டார்கள். நாங்கள் பஸ்பிடித்து நானும் எனது அம்மாவும் பெரம்பலூர் GHல் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அங்கு 3 நாட்கள் சிகிச்சை பெற்றோம். பின்னிட்டு குன்னம் காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் கொடுத்தோம். போலீசார் எங்களை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாணையில் சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகள் முதலில் எங்கள் அம்மாவை திட்டிய

விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். பின்னிட்டு சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். பெரம்பலூர் GHல் 04.04.2022ம் தேதியில் தான் நானும் எனது அம்மாவும் சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் 05.04.2022ம் தேதி புகார் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

(ii) சம்பவம் வீட்டிற்குள் நடந்ததாக தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் வீட்டிற்குள்ளும் நடந்தது, வெளியிலும் நடந்தது. போலீஸ் விசாரணையில் எதிரிகள் எதைக்கொண்டு என்னை எந்த இடத்தில் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றாலும் சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் ரெக்காட்டு செய்தபோது என்னை திட்டியதாகவும், அடித்ததையும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வினிஷா, வேல்முருகன் ஆகியோர் கல்லாலும், மூங்கில் வாரலும் என்னை எந்த இடத்தில் அடித்தார்கள் என்று போலீஸ் விசாணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த போது நான் எனது அம்மாவை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல. நிறைய பேர் இருந்தார்கள் யாரும் தடுக்கவில்லை. சம்பவத்தில் எனக்கு கன்றிய காயமோ, உடல்வலியோ, இரத்தகாயமோ இல்லை என்றால் சரியல்ல.

(iii) எதிரிகளுக்கு எதிராக பாகம் கோரி எங்கள் குடும்பத்தார் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தாத்தா ஏற்கனவே அவர்களது சொத்துகளை அவர்களது 3 மகன்களுக்கும் எழுதி கொடுத்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் பிரச்சனை வந்த போது தான் எனது பெரியப்பா, சித்தப்பா மட்டும் எழுதி கொண்டார்கள் என்றும் எனது அப்பாவிற்கு எதுவும் எழுதவில்லை என்பது தெரியவந்தது. நாங்கள் குடியிருக்கும் வீடு எதிரிகளுக்கு சொந்தமான வீடு என்று சொல்லி வேறு வீட்டிற்கு போக சொல்லி பொது மனிதார்கள் முலம் சொன்னார்கள் என்றால் பொது மனிதர்கள் சொல்லவில்லை. எதிரிகள் தான் சொன்னார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனது அம்மா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால்

சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.
Sd/-

District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.